செய்தி வெளியீடு எண்: 203 நாள் : 25.04.2016

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை – 5

# செய்தி

மனித வள மேலாளர் பதவிக்கான இளங்கலை / முதுகலை பட்ட / பட்டய படிப்புகள்

சென்னை – 5, தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் நடத்தப்பட்டு வரும் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்டப்படிப்புகள் மற்றும் பிஜி.டி.எல்.ஏ (தொழிலாளர் நிர்வாகத்தில் முதுநிலை மாலை நேர பட்டயப்படிப்பு), (D.L.L. & A.L.) தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் ஆகியவைகளில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு தொழிலாளர் நல அலுவலர், பணியாளர் அலுவலர், மனிதவள அலுவலர் போன்ற பதவிகளுக்கு இந்த பட்ட / பட்டய படிப்புகள் பிரத்யேக கல்வித்தகுதியாக தொழிற்சாலைகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்களை பல்வேறு தொழிற்சாலைகளில் மனிதவள மேம்பாட்டு மேலாளராக நியமனம் செய்ய கல்வி நிலையத்திற்கு நேரில் வந்து, மாணவர்களை தேர்வு செய்து, பணி நியமன உத்தரவு வழங்குகிறார்கள். இதன்படி, பல்வேறு மாணவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் மனிதவளத் துறையில் பணிபுரிந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறையில் தொழிலாளர் அலுவலர் மற்றும் தொழிலாளர் உதவி ஆய்வர் பதவிகளுக்கு இப்பட்ட / பட்டய படிப்புகள் முன்னுரிமை தகுதிகளாக நிர்ணயம் செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பட்டப்படிப்புகளுக்கு பல்கலைக்கழக அங்கீகாரமும், பட்டயப் படிப்புக்கு தமிழக அரசின் அனுமதியும் உள்ளது. விருப்பமுள்ள +2 முடித்த மாணவர்கள் பட்டப்படிப்பிற்கும், ஏதேனும் ஒரு பட்டம் பெற்ற மாணவர்கள் முதுநிலை பட்ட மற்றும் பட்டயப்படிப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் வழங்கும் தேதி – 15.4.2016 முதல்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்படும் இறுதி நாள் – 30.5.2016 மாலை 5 மணி வரை

விண்ணப்ப கட்டணம் ரூ.200/– (for SC / ST Rs.100/- சாதிச்சான்றிதழ் நகல் தாக்கல் செய்யவேண்டும்) செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்

தபாலில் பெற விரும்புவோர் ரூ.250/– க்கான (SC / ST பிரிவினருக்கு 150/–) வங்கி வரைவோலை "The Director, Tamilnadu Institute of Labour Studies, Chennai - 5" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு : ஒருங்கிணைப்பாளர் (சேர்க்கை)

1. Thiru. V.G. Thyagarajan
   Associate Professor
   Mob. No. 9841192332

2. Dr. R. Rameshkumar
   Associate Professor
   Mob. No. 9884159410

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்
எண்.5 காமராசர் சாலை
சென்னை – 600 005
தொலைபேசி எண்.044 – 28440102 / 28445778
நிகரி– 28440966
email: tilschennai@tn.gov.in

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**